# நன்னெறி, வெளிப்படைத்தன்மை மிக முக்கியமானது

## தமிழக அரசு சிறப்பு முயற்சிகள் துறை செயலர்

**சென்னை,நவ.1:** பணிசெய்யும் இடங்களில் நன்னெறி மற்றும் வெளிப்படைத்தன்மை மிக முக்கியமானது. இதை கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழக அரசு சிறப்பு முயற்சிகள் துறை செயலர் டி.வி.சோமநாதன் தெரிவித்தார்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் தமிழக அரசு சிறப்பு முயற்சிகள் துறை செயலர் டி.வி.சோமநாதன் பேசியது: பணி செய்யும் இடங்களில் நன்னெறி மற்றும் வெளிப்படைத்தன்மை மிக முக்கியமானது. இதைக் கடைப்பிடிக்க வேண்டும். மாறிவரும் காலத்துடன், எல்லா பணிகளில் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், நன்நெறி-வாழ்க்கையில் ஒரு வழி என்னும் தலைப்பில் நடைபெற்ற விநாடி வினா, விவாதப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.